மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

OS.No.05/2020

2022-ம் ஆண்டு ஜூலை திங்கள் 09-ம் நாள் 1872-ம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 58-ன் ஏற்பாட்டின் படி வாதி / பிரதிவாதி என்பவரை சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மோசஸ் | த/பெ. | : | |
| கிராமம் | : | | தாலுகா | : | |
| சமயம் | : | | ஜாதி | : | |
| வயது | : | | தொழில் | :<br>: | |

<u>நாள். 09.07.2022</u>
<u>வா.சா.1</u>
<u>முதல் விசாரணை :</u>

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. அதிலுள்ள விபரம் எனக்கு தெரியும்.

எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

1.28.01.2020-ம் தேதி பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்ட கணினி பட்டா (எண்ணம்-6) வா.சா.ஆ.**1** ஆகும்.

2,08.02.2020-ம் தேதி நான் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் தாக்கல் செய்த கணினி நகல் வா.சா.ஆ.**2** ஆகும்.

3.14.02.2020-ம் தேதி வழக்கறிஞர் முலம் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.**3** ஆகும்.

4.மேற்படி 20.02.2020-ம் தேதி அறிவிப்பை பிரதிவாதிகள் வாங்க மறுத்து திருப்பி அனுப்பிவிட்ட பதிவு தபால் (எண்ணம்-6) வா.சா.ஆ.**4** ஆகும்.

5.20.02.2014-ம் தேதி எனது அண்ணன் மரிய வின்செண்ட் மற்றும் பெரியப்பா மோசானந்தம் பெயரில் ஏற்பட்டுள்ள பட்டா அசல் வா.சா.ஆ.**5** ஆகும்.

6. 11.02.2021-ம் தேதி தாவா சொத்தினை பிரதிவாதிகள் அளந்து அடைக்கக்கூடாது என வட்டாட்சியருக்கு நான் கொடுத்த மனுவின் கை நகல் வா.சா.ஆ.**6** ஆகும்.

பிராது படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.